**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- பேரவை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

**1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 128(1)(கி) | சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்திற்கு உரித்துள்ள திகதிக்கு முன்னர் ஒன்று தொடக்கம் ஆறு ஆண்டுகளில் பேரவையின் 5 உத்தியோகத்தர்களால் முதலாவது அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்தது. இவ் விடயம் முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் இது தொடர்பாக நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>எஸ்சீ.எவ்ஆர்.662/2010 ஆம் இலக்க வழக்கு உடன்படிக்கையின் பிரகாரம் இது சரியாக உள்ளதென முகாமைத்துவம் கூறியிருந்த போதிலும் வழக்குத்தொடுநருடன் மேற்குறிப்பிடப்பட்ட உடன்படிக்கையை கைச்சாத்திடும் போது வழக்கு சார்ந்த உடன்படிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>அதற்கிணங்க, அரசாங்கத்தின் உரிமைகளிற்குச் சாதகமாக பணிப்பாளர் சபையால் நடவடிக்கைகள் | நீதிமன்ற உடன்படிக்கையின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் பிழையானதென நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் இது தொடர்பாக வேறு ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியத்தன்மை காணப்படவில்லை. குறித்த தரப்பொன்றால் உச்ச நீதிமன்றத்திற்கு சான்றுகளை சமர்ப்பிப்பதன் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக ஒழுங்குபடுத்தல் பேரவை நடவடிக்கைகளை எடுக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் உரிய அங்கீகாரங்கள் மற்றும் அரசாங்க உரிமைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டிருந்தது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும் 2016 ஆம் ஆண்டில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த வழக்கானது சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கொன்றாக காணப்படாததுடன் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல் வழக்கு உடன்படிக்கைக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது. | | |
| (ஆ) | 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 58 ஆம் பிரிவு | தேசிய இடர் செயற்பாட்டுத் திட்டத்தில் அணுசக்தி அல்லது கதிர்வீச்சியல் அவசரகால நிலைமையொன்றிற்கு முககங்கொடுக்கும் போது இனங்காணப்பட்ட தேசிய தொழில்நுட்ப நிறுவனமான இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையால் ‘‘தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம்’’ தயாரிக்கப்பட வேண்டும். இவ் அறிக்கை வழங்கப்படும் திகதி வரையிலும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலப்பகுதி கடந்திருந்த போதிலும் அத்தகைய அறிக்கையை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய அனைத்து தரப்பினர்களினதும் கருத்துரைகள் மற்றும் முன்மொழிவுகளின் பிரகாரம் தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம் தயாரிக்கப்பட்டு இறுதியாக திருத்தம் செய்யப்பட்ட பின்னர் தேசிய இடர் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேசிய இடர் முகாமைத்துவ சபையின் அடுத்த முதலாவது கூட்டத்திற்கு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. எனினும் அதிமேதகு சனாதிபதியால் தலைமைதாங்கப்ப | 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம் தயாரிக்கப்படுவதை பூர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | டுகின்ற தேசிய இடர் முகாமைத்துவ சபையால் கூட்டத்திற்கான திகதிகள் தீர்மானிக்கப்படுகின்றதால் இந் நடவடிக்கையை செயற்படுத்துவது எங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

செயற்பாட்டு விளைவு ரூபா 8,874,702 பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,258,188 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,616,514 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மொத்தச் செலவினம் ரூபா 5,749,545 ஆல் அதிகரித்தமை மற்றும் வருமானம் ரூபா 1,866,969 ஆல் குறைவடைந்தமை என்பன இவ்வீழ்ச்சிக்குப் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளிற்கான இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2016 ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை ரூபா 973,993 ஆக காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டிற்கானது ரூபா 3,102,117 ஆகவும் 2018 ஆம் ஆண்டிற்கானது ரூபா 1,258,188 ஆகவும் காணப்பட்டன. மீளாய்வாண்டில் இது ரூபா 8,874,702 வரை அதிகரித்திருந்தது. எனினும் வரிக்கு முன்னரான நிதி விளைவுகளிற்கு மேற்கொள்ளப்பட்ட ஊழியர் சம்பளச் சீராக்கங்களை கருத்தில் கொள்ளும் போது ஒழுங்குபடுத்தல் பேரவையின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 18,904,956, ரூபா 23,135,332, ரூபா 31,557,636 மற்றும் ரூபா 28,744,518 ஆகக் காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அயனாக்கல் கதிர்வீச்சு தொடர்பான நடவடிக்கைகளை கண்காணித்து கட்டுப்படுத்துவதன் மூலம் தீங்குவிளைவிக்கும் அயனாக்கல் கதிர்வீச்சின் விளைவுகளிலிருந்து பொதுமக்கள், நோயாளிகள், கதிர்வீச்சு பணியாளர்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாக்கும் கடப்பாட்டை | | |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்துவதற்கு 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஒழுங்குபடுத்தல் பேரவையால் நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டிருந்தது. | | |
| (i) | கம்பஹா மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள 19 நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வின் போது அயனாக்கல் கதிர்வீச்சு தொடர்பாக கண்காணித்து கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் போதியளவு நிறைவேற்றப்படாதமை அவதானிக்கப்பட்டது. | சுட்டிக்காட்டப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவையாகும். சில நடவடிக்கைகளை சீர்செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் ஏனைய விடயங்களை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்கனவேயுள்ள பதவியணியினர் போதாதுள்ளனர். எனினும் ஏற்கனவேயுள்ள வளங்களை கருத்தில் கொண்டும் உயர் ஆபத்து இயந்திரங்கள் மற்றும் நடுத்தர ஆபத்து இயந்திரங்களிற்கு முன்னுரிமையளித்தும் கதிர்வீச்சுக்குட்படும் உபகரணங்களை பரீட்சிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. | 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் பேரவையால் நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் நடவடிக்கைகள் போதியளவு நிறைவேற்றப்பட வேண்டும்.<br><br>(அ) இவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் மற்றும் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல், மாற்றம் செய்தல், நிறுத்தி வைத்தல் அல்லது இரத்துச் செய்தல்.<br><br>(ஆ) அதிகாரச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட ஏற்பாடுகளையும் இவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளையும் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | | | பின்தொடர் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல்.<br>(இ) இவ் அதிகாரச்சட்டத்தின் கீழுள்ள ஏற்பாடுகள் முறையாக கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதையும் இவ் அதிகாரச்சட்டத்தின் கீழுள்ள பிரமாணங்கள் அல்லது விதிகள் மற்றும் இவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் முறையாக அதிகாரம் பெறப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்தல். |
| (ii) | கதிரியக்க பாதுகாப்பு மற்றும் அயனாக்கல் கதிர்வீச்சின் பிரயோகம் தொடர்பான விதிகள், நெறிமுறைகள் மற்றும் நியமங்களை உருவாக்குதல் பேரவையின் பிரதான தொழிற்பாடொன்றாக உள்ளதென அதிகாரச்சட்டத்தின் 11(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கதிரியக்க பாதுகாப்பு தொடர்பான பிரமாணங்களானது ஒழுங்குபடுத்தல் பேரவை ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் தற்போதும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | கதிரியக்க பாதுகாப்புக்கள் தொடர்பான பிரமாணங்கள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் சட்ட வரைஞர் திணைக்களத்தால் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அப்பிரமாணங்கள் எங்களது அவதானிப்புக்களுடன் தேவையான மேலதிக நடவடிக்கைகளிற்காக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. கதிரியக்க பாதுகாப்பு புதிய துறையொன்றாக உள்ளதுடன் அத் தேவைப்பாடு 2 ஆண்டுகளிற்கு முன்னர் தான் ஏற்பட்டது. | 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 11(எ) பிரிவின் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் பேரவையால் நிறைவேற்றப்பட வேண்டிய கதிரியக்க பாதுகாப்பு மற்றும் அயனாக்கல் கதிர்வீச்சை பயன்படுத்துதல் தொடர்பான விதிகள் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அயனாக்கல் கதிர்வீச்சிற்கு எதிரான பாதுகாப்பு, அணு மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருட்களின் காப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் கதிரியக்க கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கையையும் தந்திரோபாயமொன்றையும் தயாரித்தல் தொடர்பாக அமைச்சரிற்கு பரிந்துரைகளை மேற்கொள்வது ஒழுங்குபடுத்தல் பேரவையின் பிரதான தொழிற்பாடாக உள்ளது என அதிகாரச்சட்டத்தின் 11(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட கொள்கையை தயாரிப்பது தொடர்பான செயற்பாடுகள் தற்போது வரை ஆரம்ப வரைபு கட்டத்திலேயே உள்ளதுடன் அதிகாரச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் பேரவை அத்தகைய கடமைகளை நிறைவேற்றத் தவறியிருந்தது. | ஒழுங்குபடுத்தல் பேரவையால் ஆரம்ப வரைபு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவரால் உள்ளடக்கம் மீளாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும். ஆகையால் எதிர்காலத்தில் சபைப் பத்திரமொன்றின் ஊடாக பொருத்தமான நபர் அல்லது குழுவொன்றை நியமிப்பதன் மூலம் வரைபு தயாரித்தலை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2014 இன் 40 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 11(ஊ) பிரிவின் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் பேரவையால் நிறைவேற்றப்பட வேண்டிய அயனாக்கல் கதிர்வீச்சிலிருந்தான பாதுகாப்பு, வளங்கள் மற்றும் ஏனைய கதிரியக்க பொருட்களின் காப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் கதிரியக்க கழிவுப்பொருள் முகாமைத்துவம் என்பவற்றிற்கான தேசிய கொள்கையையும் தந்திரோபாயமொன்றையும் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | அதிகாரச்சட்டத்தின் 11(i) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் அபிப்பிராயத்தில் உள்ளவாறான குறிக்கோள்களை அடைந்துகொள்வதில் அவசியமாகவுள்ள அத்தகைய ஏனைய கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை ஆற்றுதல் மற்றும் நிறைவேற்றுதல் பேரவையின் தொழிற்பாடாகும். அதற்கிணங்க இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட உலர்ந்த பால்மாவின் கதிர்வீச்சு பாதுகாப்பு செயற்பாடுகளை கண்காணித்து மேற்பார்வை | இது தொடர்பாக சட்டங்களை நிறைவேற்றுவதற்கு பிரதானமாக ஒழுங்குபடுத்தல் பேரவை பொறுப்பாக உள்ளதுடன் அத்தகைய சட்டம் வலுவில் உள்ளது. அத்தகைய சட்டங்களின் பிரகாரம் அணுசக்தி அதிகாரசபையின் அறிக்கைகளைப் பெற்று பகுப்பாய்வு செய்த பின்னர் பால்மாக்களை சந்தைக்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டாளரிற்கு அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. மாதிரிகளை தெரிவு | இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து பால்மாக்களும் கதிர்வீச்சிற்கு உட்படாதவை என்பதை கண்காணிப்பதற்கு இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை பொறுப்பாக உள்ளது. 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 11(i) ஆம் பிரிவின் கீழ் ஒழுங்குபடுத்தல் பேரவையால் இது |

செய்வதற்கு பேரவை பொறுப்பாக உள்ளது. எனினும் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து உலர்ந்த பால்மா இருப்புக்களும் கதிர்வீச்சிற்கு உட்பட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதில் பேரவையால் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

செய்வதற்காக ஏற்கனவேயுள்ள முறைகளை பின்பற்றுவதற்கும் பால்மாவிலிருந்து மாதிரிகளை தெரிவுசெய்வதற்கான செயன்முறை, மாதிரியின் அளவு, மாதிரியை யார் எடுக்க வேண்டும் மற்றும் பால்மா கொள்கலன்களை எவ்வாறு விடுவிக்க வேண்டும் என்பவற்றிற்காக முன்னாள் அணுசக்தி அதிகாரசபையின் உயர் மட்டத்திலுள்ளோரும் இறக்குமதியாளர்களின் பிரதிநிதிகளும் சுகாதாரத் திணைக்களத்தின் உயர் மட்டத்திலுள்ளோரால் நடாத்தப்பட்ட கலந்துரையாடலொன்றில் பரீட்சிப்பதற்கும் இணங்கப்பட்டிருந்தது. மாதிரிகளை தெரிவு செய்யும் செயன்முறை மற்றும் மாதிரிகளின் அளவு என்பன விஞ்ஞான ரீதியாக சரியாக காணப்படுகின்றது.

சந்தையில் கிடைக்கக்கூடிய பால்மா மாதிரிகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பரீட்சிப்பின் பின்னர் ஏடுகளை பேணுதல் ஆகிய பணி அணுசக்தி அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக இடம்பெற்ற முன்னைய கூட்டமொன்றில் அதிகாரசபை பரீட்சிப்பின் பின்னர் அத்தகைய ஏடுகளை பேணுகின்றதென அதனால் அறிவிக்கப்பட்டிருந்தது.

கதிர்வீச்சு பரீட்சிப்பிற்கு

நிறைவேற்றப்பட வேண்டியதுடன் இது போதுமானளவு நிறைவேற்றப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள் தொடர்பான பால்மா இருப்புக்கள் உரிய பரீட்சிப்புக்கு முன்னரே கதிர்வீச்சுக்கு உட்பட்டிருக்கவில்லை என உணவு பரீட்சிப்பு அலகினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது என்பதற்கான சான்றெதுவும் எங்களால் பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>பால்மா தொடர்பான இலங்கையின் அதிகாரியாக சுகாதார பணிப்பாளர் நாயகம் உள்ளதுடன் இது தொடர்பான தீர்மானத்தை அவர் எடுக்கின்றார். அனுப்பப்பட வேண்டிய பால்மா மாதிரியின் அளவை அறிவிப்பது மற்றும் மாதிரிகள் முறையாக கதிர்வீச்சு தொடர்பாக பரீட்சிக்கப்பட்டமைக்கான பரீட்சிப்பு அறிக்கைகளை கருத்தில் கொண்ட பின்னர் சந்தைக்கு அத்தகைய பால்மாவை விடுவிப்பதற்கு சுகாதார திணைக்களத்திற்கு தேவையான அங்கீகாரங்களை வழங்குதல் என்பன மாத்திரமே ஒழுங்குபடுத்தல் பேரவையின் பொறுப்பாகும். | |
| (ஆ) | இலங்கையில் பிரயோகிக்கப்படுகின்ற உயர் செயற்பாட்டு கதிர்வீச்சு மூலங்களை நிறுத்திவைப்பதற்காக வழங்கப்பட்டிருந்த பௌதீக பாதுகாப்பு முறைமையின் 13 நிறுவனங்களின் பாதுகாப்பு நிகழ்வுகளிற்கு முகங்கொடுப்பதை வசதிப்படுத்துவதற்காக கட்டுகுருந்த விசேட படையணி பபயிற்சி | புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஆரம்ப வரைபு தயாரிக்கப்பட்டு மீளாய்விற்காக இது உரிய தரப்பினர்களிற்கு அனுப்புதற்கான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பல தரப்பினர்களுடன் இது கைச்சாத்திடப்பட வேண்டியதன் | மத்திய கண்காணிப்பு நிலையத்தின் எதிர்கால நடவடிக்கைகளை பேணுவதற்காக இலங்கை பொலிஸ், விசேட படையணி பிரிவு, ஒழுங்குபடுத்தல் பேரவை மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலையில் மத்திய கண்காணிப்பு நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இலங்கை பொலிஸ், விசேட படையணி பிரிவு, ஒழுங்குபடுத்தல் பேரவை மற்றும் ஏனைய தரப்பினர்களிற்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் இவ் அறிக்கை வழங்கப்படட திகதி வரையிலும் ஒழுங்குபடுத்தல் பேரவை உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | காரணமாக விடயங்களை நன்றாக கற்றறிந்த பின்னர் இவ் வரைபு பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக கட்டுகுருந்தவில் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய கதிரியக்க பாதுகாப்பு நிலையத்துடன் ஏனைய நிறுவனங்களில் நிறுவப்பட்ட பாதுகாப்பு முறைமைகளை இணைப்பதை முடிவுறுத்துவதற்கு 6 மாதங்கள் எடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இவ் புரிந்துணர்வு உடன்படிக்கை இக் காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட முடியும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கையில் பிரயோகிக்கப்படுகின்ற உயர் கதிரியக்க மூலங்களை பாதுகாப்பதற்காக அனைத்து உயர் செயற்பாட்டு கதிர்வீச்சு மூலங்களுள்ள இடங்களிற்காக ஐக்கிய அமெரிக்காவின் சக்தி திணைக்களத்தின் (Department of Energy of United States) உலகளாவிய மூலப்பொருள் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் (ஜீஎம்எஸ்) சேர்ந்து அணுசக்தி பேரவையால் பௌதீக பாதுகாப்பு முறைமைகள் வழங்கப்படுகின்றன. ஒப்பந்ததாரர்களை தேடுதல், கூறுவிலைகள் கோருதல் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குதல் உள்ளடங்கலாக மேற்படி வேலை தொடர்பான அனைத்து செயற்பாடுகளும் ஐக்கிய அமெரிக்காவின் சக்தி திணைத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கையில் வழங்கப்பட | ஜீஎம்எஸ் செயற்திட்டமானது ஐக்கிய அமெரிக்காவின் சக்தி திணைக்களத்தின் கீழுள்ள அணுப் பாதுகாப்பு நிர்வாக நிறுவனத்தால் பெயரிடப்பட்ட ஆய்வுகூடமொன்றிற்கும் உரிய நிறுவனத்தின் அணுப் பாதுகாப்பு முறைமைகளை செயற்படுத்துவதற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்ததாரரிற்கும் இடையில் மேற்கொள்ளப்படுகின்றது டன் ஒழுங்குபடுத்தல் பேரவையானது வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு முறைமையின் நிறுவனத்திற்கும் ஐக்கிய அமெரிக்காவின் உரிய ஆய்வுகூடத்திற்கும் இடையேயான ஒருங்கிணைத்தல் பகுதி மாத்திரமே ஆகும். பௌதீக பாதுகாப்பு முறைமையை பெற்றுக்கொள்வதற்காக | உரிய ஒப்பந்ததாரருடன் இணைந்து ஐக்கிய அமெகாவின் சக்தி திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற பௌதீக பாதுகாப்பு முறைமைகள் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு மீளவும் தகவல் ஏடுகளை பெற்றுக்கொள்வதற்கா ன பொறிமுறையொன்று அமுல்படுத்தப்பட வேண்டும். |

வேண்டிய பாதுகாப்பு முறைமைகளின் நிறுவனங்களுடன் ஐக்கிய அமரிக்காவின் சக்தித் திணைக்களத்தினை ஒருங்கிணைத்தல் ஒழுங்குபடுத்தல் பேரவையால் மேற்கொள்ளப்படுகின்றதுடன் பௌதிக பாதுகாப்பு முறைமைகள் ஐக்கிய அமெரிக்காவின் சக்தி திணைக்களத்தால் உரிய ஒப்பந்ததாரருடன் இணைந்து வழங்கப்படுகின்றது.

எனினும் இது தொடர்பில் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு மீளவும் தகவல் ஏடு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அனைத்து ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளும் உரிய நிறுவனத்தால் நேரடியாக ஆய்வுகூடத்துடன் மேற்கொள்ளப்படுகின்றதுடன் உரிய நிறுவனம் உரிய ஒப்பந்ததாரருடன் நேரடியாக இணைந்து வேலை செய்கின்றது.